Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

உறுப்பினர் செயலர் (பொறுப்பு) , திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம்
திருநெல்வேலி அவர்களின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர்: திரு.ப.வேல்முருகன், பி.இ.,

ந.க.எண்.155/2015 / (2) தி.உ.தி.கு. நாள்.11.01.2017

பொருள்: திட்ட அனுமதி–திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம் – திருநெல்வேலி மாநகராட்சி - மேலப்பாளையம் மண்டலம், வார்டு-AR, பிளாக்-4, நகரளவை எண்.9/4A2 (மேலப்பாளையம் கிராமம், ச.எண்.76/7 பாகம்) -இல் 15360 ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு நகர் ஊரமைப்பு சட்டம் 1971ம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 49ன் கீழ் திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது– தொடர்பாக.

பார்வை:
1. மனுதாரர். திரு.M.மரியபாபுரமேஷ் என்பவரது விண்ணப்பம் நாள். 17.2.15, 26.12.16 மற்றும் 02.01.17
2. திருநெல்வேலி மாநகராட்சி ஆணையரின் கடிதம் எண்.ஜிபி1/1582/2015, நாள்.01.04.15 மற்றும் 09.09.16 மற்றும் 18.10.16
3. திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழும கூட்டத் தீர்மானம் எண்.81, நாள் 01.10.15
4. உறுப்பினர் செயலர், திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம் கடிதம் ந.க.எண்.155/15 திஉதிகு, நாள்.27.10.15

ஆணை:

திருநெல்வேலி உள்ளூர் திட்ட பகுதி, திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், வார்டு-AR, பிளாக்-4, நகரளவை எண்.9/4A2 (மேலப்பாளையம் கிராமம், ச.எண்.76/7 பாகம்)-இல் 15360 ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு ம.வ/திஉதிகு எண்.01/2017 என எண்ணிட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட வரைபடத்திற்கு 1971ம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 49ன் கீழ், கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வரைபடங்களுக்கு தி.அ/ம.வ/தி.உ.தி.கு. எண்.01/2017 என்று எண்ணிடப்பட்டு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

உத்தேச உபயோகம் -குடியிருப்பு மனைப்பிரிவு

Scanned by CamScanner

சிறப்பு நிபந்தனைகள் :

"நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

நிபந்தனைகள்:

1. இம்மனைப்பிரிவுக்கு விரிவு அபிவிருத்தி திட்ட விதிகள் மற்றும் கட்டிட விதிகள் அனைத்தும் பொருந்தும்.

2. மனைப்பிரிவு அனுமதி தொடர்பாக திருநெல்வேலி மாநகராட்சி ஆணையாளரிடம் தனியாக உரிமம் பெறப்பட வேண்டும்.

உறுப்பினர் செயலர் (பொறுப்பு),
திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம்,
திருநெல்வேலி–2.

12/1/17

பெறுநர்: ஆணையாளர்,
திருநெல்வேலி மாநகராட்சி,
(வரைபடங்கள் மற்றும் நிபந்தனைகள் இரண்டு).

நகல்:
1. வைப்பறை (உத்தரவு கடிதம்)
2 திரு.M.மரியபாபு ரமேஷ்,
எண்..7/20, கரியநாயனார் தெரு,
பாளையங்கோட்டை.
(உத்தரவு மட்டும்)

Scanned by CamScanner

அனுப்புநர்
திரு.ப.வேல்முருகன் ,பி.இ.,
உறுப்பினர் செயலர் (பொறுப்பு),
திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம்,
108, திருவனந்தபுரம் சாலை,
திருநெல்வேலி.
e-mail:tveli.lpa@gmail.com
www.nellai.tn.nic.in/tlpa
தொலைபேசி: 0462 - 2585040

பெறுநர்
ஆணையாளர்,
திருநெல்வேலி மாநகராட்சி,
திருநெல்வேலி.

ந.க.எண்.155/2015 (1) திஉதிகு நாள்.11.01.2017

அய்யா,

பொருள்: மனைப்பிரிவு – திருநெல்வேலி உள்ளூர் திட்ட குழுமப்பகுதி – திருநெல்வேலி மாநகராட்சி – மேலப்பாளையம் மண்டலம், வார்டு-AR, பிளாக்-4, நகரளவை எண்.9/4A2 (மேலப்பாளையம் கிராமம், ச.எண்.76/7 பாகம்) -இல் 15360 ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

பார்வை :
1. மனுதாரர். திரு.M.மரியபாபுரமேஷ் என்பவரது விண்ணப்பம் நாள். 17.2.15, 26.12.16 மற்றும் 02.01.17
2. திருநெல்வேலி மாநகராட்சி ஆணையரின் கடிதம் எண்.ஜிபி1/1582/2015, நாள்.01.04.15
3. வட்டாட்சியர், பாளையங்கோட்டை வட்டம் அவர்களின் கடிதம் மூ.மு.ஆ1/964/15 நாள்.07.02.2015
4. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.155/15 திஉதிகு, நாள்.27.10.15
5. அரசாணை எண்.134, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை, நாள்.20.09.2002.
6. அரசாணை எண்.130, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (யுடி4-1) துறை நாள்.14.06.2010-ன்படி பெறப்பட்ட வளர்ச்சி கட்டுப்பாட்டு விதிகள்
7. திருநெல்வேலி மாநகராட்சி ஆணையரின் கடிதம் எண்.ஜிபி1/1582/2015, நாள்.09.09.16 மற்றும் 18.10.16
8. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண்.14085/12 எல்ஏ1, நாள்.15.5.13

பார்வை 2–ல் சுட்டியுள்ள கடிதத்துடன் பெறப்பட்ட இம்மனைப்பிரிவின் ஒப்புதலுக்காக கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்ட உத்தரவு வழங்கப்படுகிறது.

திருநெல்வேலி உள்ளூர் திட்ட குழுமப்பகுதி, திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மாநகராட்சி , மேலப்பாளையம் மண்டலம், வார்டு-AR, பிளாக்-4, நகரளவை எண்.9/4A2 (மேலப்பாளையம் கிராமம், ச.எண்.76/7 பாகம்) -இல் 15360 ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கிட ஏதுவாக பார்வை 4-ல் கண்டுள்ள கடிதத்துடன் அனுப்பப்பட்ட சாலை வரைபடத்திற்கேற்ப தார் சாலைகள்

Scanned by CamScanner

அமைக்கப்பட்டு பார்வை 7-ல் கண்டுள்ள கடிதம் மூலம் தானப்பத்திரம் பெறப்பட்டதைத் தொடர்ந்து நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ திஉதிகு எண்.1/2017 என எண்ணிடப்பட்டு வரைபட நகல்கள் இரண்டு மேல்நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனை எண்.16-ன்படி சாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தினை தானபத்திரம் மூலம் மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டு பார்வை 7-ல் கண்டுள்ள கடிதம் மூலம் விபரம் பெறப்பட்டுள்ளது. மனைப்பிரிவு நிபந்தனை 19(இ), 19 (உ) குறித்து உறுதி செய்த பின்னரே ஒப்புதல் வழங்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மனைப்பிரிவிற்கு மாநகராட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது பார்வை 8-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மேற்காண் மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலைகளின் தரத்தினை மாநகராட்சி ஆணையர் அவர்களால் உறுதி செய்தும், மனைப்பிரிவு நிபந்தனை எண்.19(ஈ)—ன்படி, அவ்வுத்தரவின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளளப்படுகிறது.

உறுப்பினர் செயலர் (பொறுப்பு),
திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம்,
திருநெல்வேலி—2.

12/1/17

இணைப்பு:
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு
நிபந்தனைகள் 2 தொகுப்புகள்

நகல்
1. வைப்பறை
(உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் நிபந்தனைகளுடன்)
2. திரு.M.மரியபாபு ரமேஷ்,
எண்.7/20, கரியநாயனார் தெரு,
பாளையங்கோட்டை.
(உத்தரவு மட்டும்)

Scanned by CamScanner



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate